தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மார்கழி 13, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026–
1995 டிசம்பர் 28, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்."

சொற்களின் தொகுதியறிந்த நல்லறிவாளர்கள் அவையின் நேரம், நிலைமை, தன்மை அறிந்து ஏற்ற சொற்களை ஆய்ந்து, தெரிந்து சொல்லுதல் நல்லதாகும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

1. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிகள் அறிமுகம் செய்தல்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதற்கு அனுமதி மறுத்து உங்களுக்கு அறிவிப்புக் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடு) நான் இப்போது அவையிலேயும் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் தங்கள் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அது இதுவரை எனக்கு வரவில்லை. அதாவது நீங்கள் மறுத்து அளித்த அறிவிப்பு எனக்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி வரவில்லை என்று நீங்கள் சொன்னால் (குறுக்கீடு) 9.35-க்குத்தான் என்னிடம் கொடுக்கப்பட்டது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 8.40-க்கே அனுப்பிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம்தான் கொடுத்தார்கள். (குறுக்கீடு) இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. (குறுக்கீடு) 9.35-க்கு என்னிடத்தில் சேர்ப்பிக்கப்பட்டது. (குறுக்கீடு) உங்களுக்கு வரவில்லை என்று நீங்கள் சொல்வதற்காக இப்போது நான் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே அனுப்பி, செயலாளரிடத்தில் சேர்ப்பிக்கும்படி சொல்லி, என்னுடைய உதவியாளரை அனுப்பி இருக்கிறேன். எத்தனை மணிக்குக் கொடுத்தார்கள் என்று அவரிடம் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரிடம் கொடுக்கவில்லை, என்னிடம் கொடுத்தார்கள். (குறுக்கீடு) செயலாளர் 8.30 மணியிலிருந்து இருக்கிறார், அவரிடம் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) அது பிரச்சினை இல்லை. செயலாளரிடம் கொடுக்கவில்லை. என்னிடம் 9.35-க்குக் கொடுத்தார்கள். (குறுக்கீடு) அவர் 8.30 மணியிலிருந்து அறையில்தான் இருக்கிறார். எனவே அதுவல்ல இப்போது பிரச்சினை. நான் அனுமதி அதற்கு மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடு) அதற்கு நான் அனுமதி மறுத்து இருக்கிறேன் என்பதை அவையிலேயே தெரிவிக்கிறேன். (குறுக்கீடு) அதுபற்றிய தகவல் உங்களுக்கு வரவில்லை என்று நீங்கள் சொன்னால் நான் இந்த அவையிலேயே அறிவிக்கிறேன். அதாவது நான் அதற்கு அனுமதி மறுத்து இருக்கிறேன் என்பதை அவையிலேயும் அறிவிக்கிறேன்.

2. அரசினர் சட்டமுன்வடிகள் (அறிமுகம் செய்தல்)

(அ) உரிமையியல் நீதிமன்றங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,